<u>தேதி - 17.12.2024</u>

<u>**C.O.S.No.**4/2024</u>

<u>வா.சா.1 – திருமதி. **S**.காவேரிப்பிரியா</u>

<u>சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை</u>

தாவாச் சொத்தானது எனக்கு தானசெட்டில்மெண்டு பத்திரம் மூலம் தான் கிடைக்கப் பெற்றது என்றால் சரிதான். தாவாச் சொத்தானது சுமார் 24 செண்ட் ஆகும். தாவாச் சொத்தானது விவசாய நிலம் என்றால் சரிதான். பொதுவாக கட்டுமானபணிக்கு அரசாங்கத்திடம் இருந்து அனுமதி பெறுவது கட்டிடத்தின் உரிமையாளரின் கடமை என்றால் ஆமாம், அனைத்து பொறுப்பையும் பிரதிவாதியிடம் ஒப்படைத்திருந்தேன். வா.சா.ஆ.3 ல் பிரதிவாதி தான் கட்டிடத்திற்கு உரிய அனுமதி பெறுவது பற்றி ஒப்பந்தத்தில் எழுதப்பட்டிருந்தது என்றால் இல்லை. வா.சா.ஆ.3 ல் கூறியபடி கட்டிடம் கட்டுவதற்காக இருவரும் போட்டுக் கொண்ட ஒப்பந்தத்தின் தொகை ரூ.1,71,00,000/- என்றால் சரிதான். வா.சா.ஆ.3 பதிவு செய்யப்படாத ஒப்பந்த பத்திரம் என்றால் சரிதான். நான் கடந்த 24.01.2022 அன்று பிரதிவாதிக்கு ரூ.10,00,000/- ஐ வங்கி கணக்கில் செலுத்தினேன், பின்னர் நான் மீதம் ரூ.13,00,000/- ஐ ரொக்கமாக கொடுத்து அவரிடம் இருந்து கையெழுத்து பெற்றேன். நான் பிரதிவாதிக்கு வங்கியின் மூலம் செலுத்திய தொகைக்கு நீதிமன்றத்தில் நான் என்னுடைய வங்கி பரிவர்த்தனைகள் நகல்களை சமர்ப்பித்துள்ளேன் என்றால் சரிதான். தாவாச் சொத்து சுமார் 8,000 சதுரடி என்றால் சரிதான். 2,000 சதுரடிக்கு தான் பஞ்சாயத்து அப்ரூவல் கட்டுமான பணிக்கு கிடைக்கப் பெற்றது என்றால் சரிதான். நான் 2,000 சதுரடிக்கு அனுமதி பெற்ற பின், சுமார் 8,000 சதுரடிக்கு பிரதிவாதியை கட்டுமானப்பணிகளை மேற்கொள்ள சொன்னேன் என்றால் சரியல்ல.

நான் பிரதிவாதி கட்டிய என்னுடைய கட்டிடத்தில் தரமில்லை என்று நான் எனது சார்பில் கட்டிட பொறியாளர் திரு.ஆனந்த் என்பவரை நியமித்தேன் என்றால் சரிதான். மேற்படி ஆனந்த் கொடுத்த அறிக்கையை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் பிரதிவாதி வீட்டிற்கு கடந்த 17.08.2023 அன்று சென்றேன் என்றால் சரிதான். நான் அவர் வீட்டிற்கு பணம் கேட்டு சென்றேன் என்றால் சரிதான். அதன்பிறகு நான் மேற்படி பிரதிவாதிக்கு எதிராக காரைக்குடி துணை காவல்துறை கண்காணிப்பாளர் அவர்களிடம் மனு கொடுத்தேன் என்றால் சரிதான். என்னுடைய மனுவை மேற்படி துணை கண்காணிப்பாளர் மதுரை மாவட்டத்திற்கு உட்பட்டதால் மதுரை காவல் கண்காணிப்பாளருக்கு மாற்றப்பட்டது. மதுரை காவல் கண்காணிப்பாளர் எனது மனுவை விசாரித்து, தாவாச் சொத்தினை கட்டிட பொறியாளரை வைத்து கட்டிட தன்மையை பற்றி விசாரித்தார் என்றால் சரிதான். நான் கட்டிட பொறியாளர் கொடுத்த அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் சாட்சிகள் முன்னிலையில் தான் ஒப்பந்தம் தயாரிக்கப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.3 ல் கட்டிடம் சரியாக கட்டப்படவில்லை என்றால் பிரதிவாதி பணத்தை திரும்ப தர வேண்டும் என்று சரத்துகள் உள்ளதா என்றால் இல்லை. தாவாச் சொத்தில் பிரதிவாதி பேஸ்மென்ட் மட்டும் வரை தான் கட்டியுள்ளார் என்றால் சரிதான். நான் என்னுடைய நிரூபணவாக்குமூலத்தில் பாரா எண்.10 ல் பிரதிவாதிக்கும், எனக்கும் நடந்த சமாதான பேச்சுவார்த்தைகளுக்கு உண்டான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. நான் எங்கு வைத்து எங்கள் இருவருக்கும் இடையே சமாதான பேச்சுவார்த்தை நடத்தினோம் என்று எனது நிரூபணவாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. நான் வீட்டில் இல்லத்தரசியாக தான் உள்ளேன் என்றால் சரிதான்.

பிரதிவாதிக்கு ரூ.62,00,000 கொடுத்ததற்கான ஆவணம் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வா.சா.ஆ.3 அந்த ஒப்பந்தம் ஆகும். வா.சா.ஆ.3ல் உள்ள சரத்துக்கள் படி முன்பணம் ரூ.42,00,000/- கொடுக்க வேண்டியது ஆனால் நான் ரூ.23,00,000/- தான் கொடுத்தேன் என்றால் சரிதான். பிரதிவாதி எனக்கு அனுப்பிய அறிவிப்பில் அவர் கட்டுமானத்திற்காக எனக்காக ரூ.16,00,000/- அவர் கொடுத்தார் என்று குறிப்பிட்டுள்ளதற்கு மறுப்பு தெரிவித்து அறிவிப்பு எதுவும் அனுப்பினேனா என்றால் அனுப்பியுள்ளேன். அவர் ரூ.16,00,000/- அவ்வாறு கொடுக்கவும் இல்லை. பிரதிவாதி என்னிடம் இருந்து ரூ.42,00,000/- தான் கட்டுமானத்திற்காக வாங்கினார் என்றும், அதற்கான கட்டுமானத்தையும் அவர் கட்டிவிட்டார் என்றும், ரூ.62,00,000/- என்னிடம் கட்டுமானத்திற்காக வாங்கினார் என்பது பொய் என்றால் சரியல்ல. பிரதிவாதி அவர் பெயரிலுள்ள சொத்து பத்திரத்தை அவராக எனக்கு எழுதிக் கொடுக்கவில்லை என்றும், நான் தான் அவரிடம் மிரட்டி எழுதி வாங்கியுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி தரமாக கட்டிடம் கட்டவில்லை என்று நீதிமன்றத்தில் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றும், பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்
கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxx

முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.